Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 132/2023**

## வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அண்ணர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | ராயப்பன்கொட்டாய் | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 72 |

1ம் எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17th** Day of **April 2024.**

**முதல் விசாரணை**

நான் ராயப்பன்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். செல்லம் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். எதிரிகளை தெரியும். அசா1க்கும் எதிரிகளுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததது. அது சம்மந்தமாக கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்ய அசா1 செல்லம் என்னை அழைத்தார். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் காலாவதியான காரணத்தினால் அதனை இரத்து செய்து புதிய கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொள்ள செல்லம் என்னை அழைத்தார். அது சம்மந்தமாக நான் அரூர் சார்பதிவாளர் அலுவலகம் சென்று கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து

செய்து எழுதப்பட்ட ரத்து பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் சேர்ந்து வேலு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். மறுநாள் புதிய ஒப்பந்த பத்திரம் எழுதி தருவதாக எதிரிகள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இருந்த கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எழுதிக்கொடுத்த பாண்டு பத்திரத்தை எதிரிகள் திருப்பி கேட்டார்கள். அதற்கு அசா1 தன்னிடம் பாண்டு எதுவும் இல்லை என்று சொன்னார். பாண்டு திரும்ப கொடுத்தால்தான் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுப்பதாக எதிரிகள் சொல்லிவிட்டார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**